**பின்னிணைப்பு 1.**

(அ) இலங்கைப் பாராளுமன்றத்தினது முக்கிய சட்ட ஆக்கங்களிலிருந்து எடுக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியினதும், வங்கி நிறுவனங்களினதும் கடமைகளையும், தொழிற்பாடுகளையும் பற்றிய பகுதிகள்.

(ஆ) 1966 ஆம் ஆண்டில் நாணயச் சபை மேற்கொண்ட பிரதான நிர்வாக நடவடிக்கைகள்.

**(அ) மத்திய வங்கியினதும், வங்கித் தொழில் புரியும் நிறுவனங்களினதும் பணிகளையும், செயற்பாடுகளையும் பற்றிய, 1966 ஆம் ஆண்டின் முக்கிய சட்டவாக்கங்கள்.**

**1966 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க நிதிச் (திருத்தம்) சட்டம்.**

1966 ஆம் ஆண்டின் 65ஆம் இலக்க நிதிச்சட்டத்தினைத் திருத்துவதற்கானவொரு சட்டம்.

( இசைவு பெற்ற திகதி 1966, ஏப்பிறல் 6. )

1. இச்சட்டமானது 1966 ஆம் ஆண்டின் 8ம் இலக்க நிதித் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. 1961 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 3ம் பிரிவு அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவினைச் சேர்த்தல் மூலம் இதனால் திருத்தப்படுகிறது.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்கென, அப்பங்கு எத்தேதியில் அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது எனக் கொள்ளப்படுகிறதோ அத்தேதிக்கு நேர் முந்தைய நாளில், தரகர் ஒருவர் மூலம் நிகழ்ந்த விற்பனையொன்றின் பயனாக ஆள் ஒருவர் அப் பங்குக்கு உரித்தாளராகவிருப்பின்—

(அ) அத்தகைய மாற்றம் அந்நாளில் வங்கியின் புத்தகங்களிற் பதியப் பட்டிராவிடினும் அத்துடன்;

(ஆ) அவ் ஆள் அந்நாளில் முறைப்படி பதிவுசெய்யப்பட்ட பங்குடையவராயிரா விடினும்,

அவ்வங்கியின் ஒரு சாதாரண பங்கினையுடையவர் என்றே எக்காலத்திலும் கருதப்படுதல் வேண்டும். அதற்கிணங்க (1) ம் உட் பிரிவில் தோன்றும் வங்கியின் ஏதேனும் சாதாரண பங்கு தொடர்பாக உடையவர் என்னும் சொல்லு எக்காலத்திலும் அத்தகைய ஆளை உள்ளடக்கியிருந்ததாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**1966 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்படிக்கைச் (உறுதிப்பாட்டு) சட்டம்.**

ஆசிய அபிவிருத்தி வங்கியை நிறுவும் உடன்படிக்கையை இலங்கை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு அதிகாரமளிப்பதன் மூலம் அவ்வொப்பந்தத்தின் ஒரு கையொப்ப நாடாகிய இலங்கையை ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒரு உறுப்பு நாடாக்க உதவுவதற்கானதொரு சட்டம்.

( இசைவு பெற்ற திகதி 1966, செத்தெம்பர் 24. )

1. இச்சட்டம் 1966 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க ஆசிய அபிவிருத்தி வங்கி உடன் படிக்கைச் (உறுதிப்பாட்டுச் ) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

2. மகாதேசாதிபதியவர்கள் தமது கையொப்பமிட்ட ஆவணத்தினால், அவ்வாவணத்தில் பெயரினாற் குறிப்பிடக்கூடிய அத்தகைய ஆட்களை அரசாங்கத்தின் சார்பிற் பின்வருவனவற்றைச் செய்ய அதிகாரமளிப்பதற்கு இத்தால் தத்துவம் வழங்கப்படுகிறார்.

(அ) இச்சட்டத்தில் முறையே 'வங்கி' என்றும் 'உடன்படிக்கை' என்றும் குறிப்பீடு செய்யப்படுவதும் இலங்கை கையொப்ப நாடாகவுடையதும் இச்சட்டத்திற்கான அட்டவணையிற்றரப்பட்டுள்ளதுமான ஆசிய அபிவிருத்தி வங்கியை நிறுவுவதற்கான உடன்படிக்கையை உறுதிப்படுத்துதல் அல்லது ஏற்றுக்கொள்ளுதல்.

(ஆ) உடன்படிக்கையின் திட்ட விதிகளை இலங்கைச் சட்டத்திற்கேற்ப எதையும் ஒதுக்காது அரசாங்கம் ஏற்றுக்கொண்டதென்றும், குறித்த திட்ட விதிகளின் 64 ஆம் திட்ட விதியினதும், இணைவேடு 'அ' வினதும் பண்பின் மூலமாக வங்கியின் ஒரு மூல உறுப்பினராக வர உரிமையுடைய இலங்கை, வங்கியின் உறுப்புரிமையை ஏற்பதற்கென குறித்த திட்ட விதிகளின் கீழான எல்லாக் கடப்பாடுகளையும் அரசாங்கம் கொண்டு நடாத்துவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்திருக்கின்றதெனவும், குறிப்பிடப்படும் அத்தகைய உறுதிப்பாட்டு ஆவணத்தை அல்லது ஏற்றல் ஆவணத்தை ஐக்கிய நாடுகளின் செயலாளர் தலைமையதிபதியிடம் ஒப்படைத்தல்.

3. உடன்படிக்கையின் 8 ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் இலங்கையிற் சட்டவலுவுடையதாயிருக்கும். அதன்படி வங்கியானது குறித்த 8 ஆம் அத்தியாயத்திற் குறிப்பிட்டுள்ள தகுதி பாதிக்கப்படாவியல்புகள் விலக்குகள் சிறப்புரிமைகளை இலங்கையில் உடையதாயிருக்கும்.

4. உடன்படிக்கையின் திட்டவிதிகளின் கீழ் இலங்கை அரசாங்கத்தால் வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டிய அல்லது காலத்துக்குக்காலம் செலுத்தப்படவேண்டியனவாய் வரும் அத்தகைய தொகைகள் இலங்கைத் திரட்டு நிதியிலிருந்து செலுத்தப்படவேண்டும்.

5. (1) 4 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் திரட்டு நிதியிலிருந்து செலுத்தத் தேவையான எத்தொகையையும் ஏற்பாடு செய்வதற்காக நிதியமைச்சர் இலங்கை அரசாங்கத்தின் சார்பில், தாம் சரியென நினைக்கும் விதத்தில் இலங்கை மத்திய வங்கிக்கு வட்டியற்ற மாற்ற முடியாத தாள்களை அல்லது கடப்பாடுகளை உண்டாக்கி வழங்குவதன் மூலம் கடனுகப் பெற இத்தால் அதிகாரமளிக்கப்படுகிறார்.

(2) பணச்சட்டத்திலுள்ள எது எவ்விதமிருப்பினும், இப் பிரிவின் (1) ம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க உண்டாக்கப்பட்டு வழங்கப்பட்ட எத்தாள்களையும் அல்லது கடப்பாடுகளையும் ஏற்றுக்கொள்ளவும் வைத்திருக்கவும் இலங்கை மத்திய வங்கி இத்தால் அதிகாரமளிக்கப்படுகிறது.

(3) இப்பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கிக்கு, உண்டாக்கப்பட்டு வழங்கப்பட்ட தாள்கள் அல்லது கடப்பாடுகள் எவற்றையேனும் மீட்பதற்குத் தேவையான எல்லாத் தொகைகளும் இலங்கைத் திரட்டு நிதியிலிருந்து செலுத்தப்பட வேண்டும்.

6. உடன்படிக்கையின் திட்ட விதிகளின் கீழ் வங்கியிலிருந்து இலங்கை அரசாங்கத்தின் சார்பிற் பெற்றுக் கொள்ளப்படும் எல்லாத் தொகைகளும் இலங்கைத் திரட்டு நிதியினுட் செலுத்தப்பட வேண்டும். அப்படிப் பெறப்பட்ட தொகைகள் (அவை மூலதனத்தைப் பிரதிநிதிக்கும் வரை) ஏதாவது எழுத்துச் சட்டத்தின் கீழ் வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி, காலத்துக்குக் காலம் நிதியமைச்சராற் பணிக்கப்படக்கூடிய வகையில், இச்சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட தாள்களை அல்லது கடப்பாடுகளை மீட்பதிற் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

7. (1) உடன்படிக்கைத் திட்டவிதிகளின் ஏற்பாடுகள் எவற்றையேனும் நடைமுறைக்குக் கொண்டுவர நியாயமாகத் தேவையானவையென நினைக்கும் வேறு ஏற்பாடுகளை நிதியமைச்சர் வர்த்த மானியிற் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினுற் செய்யலாம். இவ்வுட்பிரிவின் கீழ்ச் செய்யப்பட்டு அப்படிப் பிரசுரிக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும் கிடைக்கும் முந்தைய சந்தர்ப்பத்தில் பிரதிநிதிகள் சபையின் முன் வைக்கப்படவேண்டும். அது ஒரு மாதத்திற்குள் நிராகரிக்கப்பட்டாலொழியச் சட்டவலுவுடையதாயிருக்கும்.

(2) உடன்படிக்கைத் திட்ட விதிகளின் கீழ் அதற்குள் நிதிக் கட்டுப்பாடுகள் அல்லது பொறுப்புக்களை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள அல்லது முற்றுவிக்கவுதவுவதற்காக அவர் நியாயமாகத் தேவையெனக் கருதும் எல்லா நடவடிக்கைகளையும் வழிகளையும் நிதியமைச்சர் கையாளலாம்.

**1966 ஆம் ஆண்டின் 21 ம் இலக்க ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்படிக்கை (உறுதிப்படுத்தல்) சட்டத்தின் அட்டவணை மீதான குறிப்பு.**

இவ் அட்டவணையானது ஆசிய அபிவிருத்தி வங்கியைத் தாபிக்கும் உடன்படிக்கையின் உரைச்செய்தியையும் அத்தோடிணைந்துள்ள ஆவணங்களையும் கொண்டுள்ளது. அவ்வுடன்படிக்கையின் சுருக்கத் தொகுப்பு பின்வருமாறு:

இவ்வுடன்படிக்கைக்கான தொடக்கவுரை ஆசிய அபிவிருத்தி வங்கியைத் தாபித்தலை ஏற்படுத்தற்கான காரணங்களை எடுத்துக்கூறுகின்றது. ஆசிய பிரதேசங்களுக்கும் தூர கிழக்குப் பிரதேசங்களுக்கும், அத்தகைய பிரதேசத்தின் உள்ளும் புறத்தும் விதிகளையும் ஏனைய வருவாய்க்களன்களையும் திரட்டுதல் மூலமும் கூடுதலான உள்ளூட்டுச் சேமிப்பைப் பெறுவதற்கும் அப்பிரதேசத்தின் அபிவிருத்தி நிதிகளைப் பெருமளவில் எய்தச் செய்தற்கும் உகந்த சூழ்நிலைகளை, ஏற்படுத்தி மேம்படுத்த விழைதல் மூலமும் கூடிய அபிவிருத்தி நிதிவாய்ப்பை அளித்தல், முக்கிய காரணமாகும்.

**1 ஆம் அத்தியாயம்**: வங்கியின் நோக்கங்கள், பணிகள், உறுப்பாண்மை பற்றிய விதிகள் என்பவற்றைத் தருகின்றது. (உடன்படிக்கையின் 7ஆம், 10 ஆம் அத்தியாயங்களும் உறுப்பாண்மை பற்றிய சில ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன.) பொதுவில், வங்கியின் நோக்கம், ஆசிய தூர கிழக்குப் பிரதேசங்களில் பொருளாதார வளர்ச்சியினையும் கூட்டுறவினையும் மேம்படுத்தலும், கூட்டாகவும் தனித்தனியாகவும் அப்பிரதேசங்களிலுள்ள அபிவிருத்தியடைந்துவரும் உறுப்பு நாடுகளின் பொருளாதார அபிவிருத்திப் போக்கை விரைவுப்படுத்தலும் ஆகும். (திட்ட விதி 1).

வங்கியின் மிகமுக்கிய பணிகளாவன, சொல்லப்பட்ட பிரதேசத்தில், அபிவிருத்தி நோக்கங்களுக்கென, அரசாங்க, தனியார்துறை முதல்களை முதலீடு செய்ய ஊக்குதலும் அதன் கையடைவு வாய்ப்பிலுள்ள வருவாய்க் களன்களை பயன்படுத்தலும், பிரதேசத்திலுள்ள அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் அபிவிருத்திக்குப் பணம் வழங்கலும், அவற்றின் அபிவிருத்திக் கொள்கைகளையும் திட்டங்களையும் ஒருமுகப்படுத்தலிலும் தொழினுட்பவுதவி ஏற்பாடு செய்தலிலும் துணை செய்தலும் ஆகும். ( திட்ட விதி 2. )

ஐ. நா. பொ. வி. ஆ. தூ. கி. உறுப்பினர்க்கும் முற்றுரிமையிலாவுறுப்பினர்க்கும், ஐ. நா. வில் அல்லது அதன் ஏதாவது சிறப்பு முகாமை நிறுவனத்தில் உறுப்பினராகவுள்ள சொல்லப்பட்ட பிரதேச நாடுகளுக்கும் பிரதேச நாடுகளல்லா வேறு அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் இந்த வங்கியில் உறுப்பாண்மை பெறவுள்ளது. ( திட்ட விதி 3. )

**இரண்டாம் அத்தியாயம்**: வங்கியின் மூலதனத்தின் அமைப்பைக் காட்டுகின்றது. வங்கியின், அதிகாரமளிக்கப்பட்ட மூலதனப் பங்குத் தொகுதி, 100 கோடி ஐ. அ. டொலர்கள் ஆகும். ( $ 1, 000, 000, 000 ) (திட்ட விதி 4. ) இந்த மூலதனப்பங்குத் தொகுதிக்கான பிரதேச நாடுகளினதும் பிரதேசத்துட்படா நாடுகளினதும் தொடக்கக் கட்டுத்தொகை முறையே ஐ. அ. டொலர்கள் 65 கோடியும், ஐ. அ. டொலர்கள் 35 கோடியும் ஆக மொத்தத்தில் ஐ. அ. டொலர்கள் 100 கோடி என நிச்சயிக்கப்பட்டுள்ளது. (சேர்ப்பு அ) இலங்கையின் தொடக்கக் கட்டுத் தொகை 85 இலட்சத்து இருபதினுயிரம் ஐ. அ. டொலராக நிச்சயிக்கப்பட்டுள்ளது.

**மூன்றும் அத்தியாயம்:** வங்கியின் தொழிற்பாட்டு முறையையும் நெறியையும் கூறுகிறது: வங்கியின் வருவாய்க்களன்களும் வசதிகளும், உடன்படிக்கைகள் **1** ஆம், 2 ஆம் திட்டவிதிகளில் தரப்பட்டுள்ள விதமாக அந்நோக்கங்களேயும் பணிகளேயும் நிறைவேற்றற்கு மட்டுமே பயன்படுத்தல் வேண்டும். ( **8** ஆம் திட்ட விதி. )

வங்கியின் மிக முக்கிய தொழிற்பாடு நெறிகள் பின்வருவனவாகும்:

வங்கியின் தொழிற்பாடு, பிரதேசம் முழுவதும் ஒன்முக இணைந்த பொருளாதார முன்னேற்றம் பெற மிகத்திறம்பட உதவக்கூடிய திட்டங்களுக்கும் செயல் நடவடிக்கைகளுக்கும் முதன்மையளித்துக் குறிப்பிட்ட திட்டங்களுக்குப் பெரும்பான்மையில் பண வேற்பாடு செய்தல் ஆகும். பிரதேசத்திலுள்ள சிறியனவும் குறைந்தளவு அபிவிருத்தியடைந்துள்ளனவுமான உறுப்பு நாடுகளின் தேவைகளுக்குக் குறிப்பான கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். ( திட்ட விதி **14 (1)** உம் **(11)** உம் ) வங்கியானது அதன் தொழிற்பாட்டில் திறமையான வங்கித் தொழில் நெறிகளேப்பின் பற்றுதல் வேண்டும்.

**4 ஆம் அத்தியாயம்:** வங்கியின் கடன்றிரட்டாற்றல், ஏனைய பல்வகையான தத்துவங்கள் என்பன பற்றிக் கூறுகின்றது. ( திட்ட விதி **21** )

**5 ஆம் அத்தியாயம்:** மாற்றப்படுமியல்பைத் தணித்தல் (**23** ஆம் திட்ட விதி) நாணயங்களேப் பயன்படுத்தல் ( **24** ஆம் திட்ட விதி ) வங்கியின் நாணயவைப்புக்களின் பெறுமதியைப் பேணுதல் ( **25** ஆம் திட்டவிதி ) என்பனவான நாணயம் தொடர்பிலான ஏற்பாடுகளேக் கூறுகின்றது.

**6 ஆம் அத்தியாயம்:** வங்கியின் நிறுவன முகாமை அமைப்பைக் காட்டுகின்றது.

**அமைப்பு**

இவ்வங்கியானது, ஆளுநர் சபையொன்றையும், பணிப்பாளர் சபையொன்றையும், முதல்வரொருவரையும், ஒன்று அல்லது அதற்கதிகமான துணை முதல்வர்களேயும், அவசியமெனக் கருதப்படுகையில் வேறு அலுவலாளர்களேயும், பணியாட்களேயும் கொண்டிருக்கும். ( திட்டவிதி **26** )

ஆளுநர் சபையானது, ஒவ்வோர் உறுப்பு நாட்டிலிருந்தும் ஒரு பிரதிநிதியைக் கொண்டிருக்கும். ( திட்டவிதி **27** )

பணிப்பாளர் சபையானது, ஆளுநர்களினுல் தெரிவு செய்யப்பட்ட பத்து உறுப்பினர்களேக் கொண்டிருக்கும். இவர்களில் எழுவர் பிரதேச உறுப்பினர்களாகவும், மூவர் பிரதேசமல்லா உறுப்பினர்களாகவும் இருப்பர். ( திட்டவிதி **30** )

வங்கியின் முதல்வர் ஆளுநர் சபையினுல் தெரிவு செய்யப்படுவர். ( திட்டவிதி **34.** )

முதல்வரின் விதப்புரையின் பேரில் ஒன்று அல்லது அதற்கதிகமான துணை முதல்வர்கள், பணிப்பாளர் சபையினுல் நியமிக்கப்படுவர். ( திட்டவிதி **35** )

**தத்துவங்களும் பணிகளும்**

ஆளுநர் சபைக்கு வங்கியின் தத்துவங்கள் எல்லாம் அளிக்கப்பட்டுள்ளன. ( திட்டவிதி **28** )

வங்கியின் பொதுவான தொழிற்பாடுகளே நெறிப்படுத்துவதற்குப் பணிப்பாளர் சபையே பொறுப்பாயிருக்கும். வேறு விடயங்கள் உட்பட, குறிப்பாக வங்கியின் வரவு செலவுத் திட்டத்தைப் பணிப்பாளர் சபை அங்கீகரித்தல் வேண்டும். ( திட்டவிதி **31** )

முதல்வரே பணிப்பாளர் சபையில் தலைவராயிருத்தல் வேண்டும். முதல்வருக்கு அறுதியிடுவாக்கொன்றுண்டு. முதல்வரானவர் வங்கியின் சட்டப்பிரதிநிதியாயிருத்தல் வேண்டும் என்பதோடு வங்கிப்பணியாட்டொகுதியின் தலைமையாளும் ஆகுதல் வேண்டும். வங்கியின் நாளாவட்ட அலுவல்களின் நடப்புக்கும், வங்கியின் அமைப்பாண்மைக்கும், வங்கியின் அலுவலாளர்களையும் பணியாட்டொகுதியையும் நியமித்தல், நீக்குதல் என் பனவற்றுக்கும், பணிப்பாளர் சபையால் விடுக்கப்படக்கூடியனவான அத்தகைய ஒழுங்கு விதிகளுக்கமைய, வங்கி முதல்வரே பொறுப்பானவராயிருத்தல் வேண்டும். (திட்டவிதி 34)

துணை முதல்வர் ஒருவர் அத்தகைய தத்துவங்களையும் பணிகளையும் பணியாளர்சபை யிற்றீர்மானிக்கப்படக் கூடியதான அத்தகைய முறையிற் பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும். ( திட்டவிதி 35. )

இந்த அத்தியாயத்தில் உள்ள மற்றைய திட்டவிதிகள், வங்கியின் பன்னாட்டியல் தொடர்பான ஏற்பாடுகளை எடுத்துக்கூறுவதோடு வங்கியும் அதன் அலுவலாளர்களும் அரசியல் அலுவல்களில் எவற்றிலும் பங்கெடுத்தலையும் தடை செய்கின்றன. ( திட்டவிதி 36. ) அதன் முதன்மையலுவலகம் அமைந்துள்ள அமையிடம் அதாவது, மனிலா, பிலிப்பைன் தீவுகள் ( திட்டவிதி 37. ) அதன் அலுவல்மொழி, அதாவது ஆங்கிலம் ( திட்டவிதி 39. ) அத்துடன் தேறிய வருமானத்தைப் பிரித்தொதுக்கல் ( திட்டவிதி 40. )

**7 ஆம் அத்தியாயம்:** வங்கியுறுப்பாண்மையைக் கைவாங்குதல், நிறுத்திவைத்தல் என்பன தொடர்பான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. ( 1 ஆம் அத்தியாயத்தின் கீழ் ஏலவே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள 41 ஆம், 42 ஆம் திட்டவிதிகள், அத்தோடு வங்கியின் தொழிற்பாட்டைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தலும் முடிவுக்குக் கொண்டுவருதல் என்பனபற்றிய ஏற்பாடுகளையும் ( முறையே 44 ஆம், 45 ஆம் திட்டவிதிகள் ) தேறிய வரு மானத்தை உறுப்பினர்க்கிடையே பிரித்தளித்தல் பற்றிய ஏற்பாட்டையும் (47 ஆம் திட்ட விதி ) கொண்டுள்ளது.

**8 ஆம் அத்தியாயம்:** வங்கியினதும் அதன் அலுவலாளர்களினதும் நிலைமை, பாதிக் காவியல்பு, விலக்குகள், சிறப்புரிமைகள் என்பன தொடர்பான ஏற்பாடுகளைக் கொண் டுள்ளது. வங்கி ஒரு முழுமையான 'சட்டப்புனைவாள்' கொண்டதாதல் வேண்டும். ( திட்ட விதி 49. ), அது தேடப்படுதல், பறிமுல் செய்யப்படுதல், வேறேதும் விதத்திற் கைப்பற்றப் படுதல் என்பவற்றால் பாதிக்கப்படாதிருத்தல் வேண்டும். ( 51 ஆம், 52ம் திட்டவிதிகள்), அதன் செய்தித் தொடர்புகள் சிறப்புரிமைகள் கொண்டனவாதல் வேண்டும். ( 54 ஆம் திட்டவிதி, ) அதன் ஆளுநர்கள், பணிப்பாளர்கள், அலுவலாளர்கள், ஊழியர் என்போர் அழைப்புக்கட்டளை முதலியன, வேறு சட்டமட்டுப்பாடுகள் முதலியன என்பன வற்றில் பாதிக்கப்படாதிருத்தல் வேண்டும். ( திட்டவிதி 55 ). வங்கியின் சொத்துக்கள் ஆதனம், வருமானம் முதலியன எல்லா வரிகள், சுங்கம், கட்டணங்கள் என்பன வற்றிலிருந்து விலக்களிக்கப்படுத்தல் வேண்டும். அத்துடன் ஆளுநர்கள், பணிப்பாளர்கள், அலுவலாளர் கள், ஊழியர் என்போரின் சம்பளங்களுக்கும் ஊதியங்களுக்கும் குறித்த சில வரிச் சலுகை கள் உண்டு. (56 ஆம் திட்டவிதி )வங்கியானது, அதற்கு அவ்வாறு வழங்கப்பட்ட சிறப்புரி மைகள், பாதிக்காவியல்வு, விலக்குகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுளேதேனு மொன்றை வற்புறுத்தாது விடல் கூடும். ( 58 ஆம் திட்டவிதி )

**9 ஆம் அத்தியாயம்:** உடன்படிக்கையில் திருத்தங்கள் செய்தல், ( 59 ஆம் திட்ட விதி ) உடன்பாட்டின் ஏற்பாடுகளைப் பொருள்கோடல் அல்லது பிரயோகித்தல் ( 60 ஆம் திட்டவிதி ) , நடுத்தீர்ப்புச் செய்தல் ( 64 ஆம் திட்டவிதி ) , உறுப்பினரின் அங்கீகாரங்களும் தடைகளும் (62 ஆம் திட்டவிதி ) என்பன போன்ற குறித்த சில பல்வகையனவான கரு மங்களுக்கு ஏற்பாடு செய்கின்றது.

**10 ஆம் அத்தியாயம்:** உடன்படிக்கையின் இறுதியான ஏற்பாடுகளை எடுத்துக்கூறு வதோடு அதன் கையொப்பம், வைப்பு என்பனபற்றியும் (63 ஆம் திட்டவிதி), கை யொப்பநாடுகளும் வேறுநாடுகளும் உடன்படிக்கை வலுவுக்கு வருதல் பற்றியும் (65 ஆம் திட்டவிதி) வங்கியின் தொழிற்பாடுகள் தொடங்கல் பற்றியும் (66 ஆம் திட்டவிதி) பேசு கின்றது.

உடன்படிக்கையின் 'அ' என்னும் சேர்ப்பில் காட்டப்பட்டாங்கு, அவற்றின் தொடக்கக் கட்டுப்பணத்தின் திரண்ட மொத்தம் அதிகாரமளிக்கப்பட்ட வங்கி மூலதனப்பங்குத்தொ குதியின் 65% இற்குக் குறையாததாயிருக்கும் வண்ணம் கட்டுப்பணம் செலுத்த வேண் டிய பத்துக்குக் குறையாத பிரதேசநாடுகள் உட்பட ஆகக் குறைந்தது 15 கையொப்பநாடு கள் அவற்றின் உறுதிப்படுத்தற் சாதனங்களை அல்லது ஏற்கைச் சாதனங்களைக் கொடுத்த தன் பின்னர் உடன்படிக்கை வலுவுக்கு வருதல் வேண்டும். (65 ஆம் திட்டவிதி)

உடன்படிக்கைக்கு 2 சேர்ப்புக்கள் உள்ளன. 'அ' என்னும் சேர்ப்பு, அதிகாரமளிக் கப்பட்ட மூலதனப் பங்குத் தொகுதிக்குப் பிரதேச நாடுகள் செலுத்தவேண்டிய தொடக் கக்கட்டுப்பணத்தையும் (பாகம் அ) பிரதேச நாடுகளல்லா நாடுகள் செலுத்தவேண்டிய கட்டுப்பணத்தையும் (பாகம் ஆ) எடுத்துக் கூறுகின்றது. 'அ' என்னும் சேர்ப்பு, பணிப் பாளர்கள், பிரதேச நாட்டுறுப்பினரைப் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஆளுநர்களால் எவ் வாறு தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும் என்பதையும், பிரதேச நாடல்லா நாட்டுறுப்பின ரைப் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஆளுநர்களால் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுதல் வேண் டும் என்பதையும் விரிவாக எடுத்துக் கூறுகின்றது.

---

### 1966-ம் ஆண்டின் 22-ம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம்

1966.-67ம் நிதி ஆண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய சேவை யின் நோக்கத்துக்காக இலங்கையிலோ வெளிநாடுகளிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், குறித்த நிதி ஆண்டில் அரசாங்கத்தின் சில முயற்சிகள் சம்பந் தமாக நிதி ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய முயற்சிகளின் செலவுக்குக் குறித்த நிதி ஆண்டில் தேவைப்படும் பணங்களை இலங்கையின் திரட்டு நிதியிலிருந்து அல்லது அர சாங்கத்துக்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியிலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக் கொடுக்க வசதி செய்வதற்கும், குறித்த திரட்டு நிதிக்கு அப்பணங்களைத் திருப்பிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் முற்கூறிய விடயங்களு டன் தொடர்பான அல்லது இடைநேர் விளைவான விடயங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கு மானதொரு சட்டம்.

(இசைவு பெற்ற திகதி: 1966 செத்தெம்பர் 26)

**1.** 1966 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டமென இச்சட்டம் எடுத்துக் காட்டப்படலாம்.

**2.** (1) 1966 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 1ந் தேதி தொடங்கி 1967ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30ந் தேதி முடியும் நிதியாண்டின் சேவைக்கானதும், இருநூற்றிஐம்பத்திரண்டு கோடியே முப்பத்தாறு இலட்சத்து தொண்ணூற்றையாயிரத்து இருநூற்றியெழுபத்தெட்டு ரூபாயென மதிப்பிடப்படுவதும் ஆகிய அரசாங்கத்தின் செலவுத் தொகையானது, செலவு எவற்றையும் அனுமதிக்கும் வேறு சட்டமெதற்கும் பங்க மின்றி—

(அ) இலங்கையின் திரட்டு நிதியினின்றும், அல்லது அரசாங்கத்துக்குச் சேர்ந்த அல் லது அதன் வசமுள்ள வேறெந்த நிதியினின்றும் அல்லது பணங்களினின் றும் வழங்கப்படுமாறு இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளி னின்றும்,

(ஆ) அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் இலங்கையிலோ வெளிநாட்டிலோ திரட்டப்படும்படி இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடன்களின் வரும்படியி னின்றும், எவ்விதமாயினும் அத்தகைய வரும்படியின் தொகை தொண் ணூற்றொரு கோடி ரூபாவுக்கு மேற்படாதவாறும், பெறப்படுதல் வேண்டும்.

இதன் கண் முன்னர் கூறப்பட்டுள்ள ரூபாவான தொகை இச்சட்டத்தின் முதல் அட்டவணையிற் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(2) இப்பிரிவின் (1) ம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அரசாங்கத்துக்காகவும் அதன் சார் பிலும் கடன் திரட்டுவதற்கு அதிகாரமளிக்கும் எழுத்திலுள்ள வேறு எந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் பங்கம் விளைவிக்காமல் செயற்படும்.

(3) (1) 2ம் பிரிவிற் குறிப்பிடப்பட்டுள்ள நிதி ஆண்டில் இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 1ம் நிரலிற் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு முயற்சியினின்றும், அரசாங்கம் பெறும் வரவுகள் அத்தகைய முயற்சியின் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும். ஆனல் அவ்வாறு வரவில் வைக்கப்பட்ட வரவுகளின் மொத்தத் தொகை, அந்த அட்டவணையின் 3ம் நிரலில் அவற்றுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படலாகாது. அத்தகைய முயற்சியினின்றும் அத்தகைய ஆகக்கூடிய எல்லைக்கு மேலாகப் பெறப்படுவன யாவும் இலங்கைத் திரட்டு நிதியின் கணக்கில் வரவு வைக்கப் படுதல் வேண்டும்.

(2) 2ம் பிரிவிற் குறிப்பிட்டுள்ள நிதிஆண்டில் இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணை யின் 1ம் நிரலில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு முயற்சியினுலும் அரசாங்கத்துக்கு ஏற்படும் செலவுகள், அந்த நிதி ஆண்டில் அத்தகைய முயற்சியினின்றும் அரசாங்கம் பெறும் வரவுகளிலிருந்து கொடுபடுதல் வேண்டும். ஆனல், அத்தகைய செலவு, அந்த அட்ட வணையின் 2ம் நிரலில் அதற்கு எதிரே குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்பட லாகாது.

(3) 2ம் பிரிவிற் குறிப்பிட்டுள்ள நிதி ஆண்டின் முடிவில், இச்சட்டத்தின் 2ம் அட்ட வணையின் 1ம் நிரலில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு முயற்சியினின்றும் நிலுவையாக வுள்ள வரவு மீதி, அந்த அட்டவணையின் 4ம் நிரலில் அதற்கு எதிரே குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படலாகாது. அன்றியும் அந்த நிதி ஆண்டின் முடிவில் அந்த முயற்சியின் மொத்தப் பொறுப்புக்கள் அந்த அட்டவணையின் 5ம் நிரலில் அதற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படலாகாது.

4. 2ம் பிரிவிற் குறிப்பிடப்பட்டுள்ள நிதி ஆண்டில் எக்காலத்திலும் இச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 1ம் நிரலிற் குறிப்பிடப்பட்டுள்ள எந்த முயற்சியினின்றும் அரசாங்கம் பெறும் வரவுகள் அத்தகைய முயற்சியினுல் அரசாங்கத்துக்கு ஏற்படும் செலவுகளுக்குப் போதியளவாயிராவிடின், அத்தகைய செலவுக்குத் தேவையெனத் தம் மாற் கருதப்படும் அத்தகைய தொகைகள் முற்பணங்களாக இலங்கைத் திரட்டு நிதியிலி ருந்து அரசாங்கத்துக்குச் சேர்ந்த அல்லது அதன் வசமுள்ள வேறேதேனும் நிதியிலி ருந்து அல்லது பணங்களிலிருந்து கொடுக்கப்படுதல் வேண்டுமென நிதியமைச்சர் காலத் திற்குக் காலம் கட்டளை மூலம் பணிக்கலாம். எவ்வாருயினும், அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்படும் மொத்தத் தொகை, அந்த அட்டவணையின் 2ம் நிரலில் அதற்கு நேரே குறிப்பிடப்பட்டுள்ள செலவுகளின் ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். அத்தகைய முயற்சி சம்பந்தமாக, அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்பட்ட எத்தொகை களும் நிதியமைச்சராற் கட்டளை மூலம் பணிக்கப்படும் வகையில் திரட்டு நிதிக்குத் திரும் பக் கொடுக்கப்படல் வேண்டும்.

5. இச்சட்டத்தின் முதல் அட்டவணையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அந்த அட்டவணை யிற் குறிப்பிடப்பட்டுள்ள எந்தத் தலைப்பின் கீழும் 3ம், 5ம், 7ம் வாக்குப்பணங்களைத்

தவிர்ந்த எந்த வாக்குப்பணத்துக்கேனும் ஒதுக்கப்பட்ட எப்பணங்களும் செலவு செய்யப் படாதனவாயும் இனிமேலும் செலவு செய்யப்படாதனவாயும் இனிமேலும் செலவு செய் யப்படமாட்டாவெனவும் காணப்படின், இப்பணங்கள் திறைசேரிச் செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெந்த உத்தியோகத்தரினதும் கட்டளையின் மீது அதே தலைப்பிலுள்ள பிறிதொரு வாக்குப்பணத்துக்கு மாற்றப்படலாம்.

6. சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 2ம் நிரல், 3ம் நிரல், 4ம் நிரல், 5ம் நிரல் என்பனவற்றிற் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைகளுள் எவற்றையேனும் நிதி யமைச்சர் அரசாங்கத்தின் அனுமதியோடு 1968 யூன் 30 இலோ அதற்கு முன்னரோ கட்டளை மூலம் மாற்றலாம் அல்லது வேறுபடுத்தலாம். அத்தகைய கட்டளை எதுவும், அதன்கட் குறிப்பிடக்கூடியதான அச்சட்டம் ஆக்கப்பட்ட தேதியின் முன்னரான, அத் தகைய தேதியிலிருந்து பயனுடையதாக வந்து விட்டதாக, அவ்விதம் கூறப்பட்டிருப்பின் கருதப்படுதல் வேண்டும்.

7. பிரதிநிதிகள் சபை, தீர்மானத்தின் மூலம் இரண்டாம் அட்டவணையை அவ் வட்ட வணையின் இயைபான நிரல்களுக்கு, ஏதேனும் முயற்சியையும் அத்தகைய முயற்சிக்குச் சம்பந்தமான எல்லா அல்லது எந்த ஆகக்கூடிய எல்லைகளையும் சேர்ப்பதன் மூலம் மாற்றலாம்.

**அட்டவணைகளின் மீதான குறிப்பு:**

1966 ஒற்றோபர் 1ம் திகதியிற்றொடங்கி 1967 செத்தெம்பர் 30ம் திகதியில் முடிவடை கின்ற நிதியாண்டிற்குரிய பொதுச்சேவைகளுக்குக் கொடுபட வேண்டிய தொகைகளின் விபரத்தை செலவின் பலதரப்பட்ட தலைப்புகளின் கீழ், முதலாவது அட்டவணை தருகின் றது. இச் சேவைகளுக்குக் கொடுக்கப்படவேண்டிய முழுத்தொகை, இருநூற்றி ஐம்பத்தி ரண்டு கோடியே முப்பத்தாறு இலட்சத்து தொண்ணூற்றையாயிரத்து இருநூற்றி எழுபத் தெட்டு ரூபாயென ( ரூபா 252, 36, 95, 278 ) மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகையானது, இச்சட்டத்தின் பிரிவு 2 (1) இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் செலவழிக்கப் படலாம்.

அரசாங்கத்தின் அதே நிதியாண்டிற்குரிய சில முயற்சிகளையொட்டிச் செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளை இரண்டாவது அட்டவணை பிரித்துத் தருகின்றது. இப்பிரிவு முறை அரசாங்கத் தின் சில முயற்சிகளையொட்டியும் பல்வேறு திணைக்களங்களின் தலைப்புக்களின் கீழும் அத்திணைக்களங்களில், அரசாங்கத்தின் முயற்சிகளின் செலவின் ஆகக்கூடிய எல்லைகளை யும், அரசாங்க முயற்சிக் கணக்கில் வரவு வைத்தற்குரிய வரவுகளின் ஆகக்கூடிய எல்லை களையும், அரசாங்க முயற்சியின் பற்று நிலுவைகளின் ஆகக்கூடிய எல்லைகளையும், அர சாங்க முயற்சியின் பொறுப்புகளின் ஆகக்கூடிய எல்லைகளையும் குறிபிட்டுக் காட்டுகின்றது. இத்தொகைகள், இச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், பிரித்துக் கொடுக்கப்பட்டதன் நியதிகளின்படி செலவழிக்க, வரவு வைக்கப்படலாம்

**1966 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க நிதி (விசேட ஏற்பாடுகள்) திருத்தச் சட்டம்.**

1965 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க நிதிச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை திருத்திவதற்கானதொரு சட்டம்.

1. இச்சட்டம் 1966 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க நிதி (விசேட ஏற்பாடுகள்) (திருத் தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

**2. 1965** ஆம் ஆண்டின் **10** ஆம் இலக்க நிதி ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தினுல் தள்ளுபடி செய்யப்பட்ட ஒவ்வொரு சட்டவாக்கமும், அத் தள்ளுபடி இருந்த போதிலும், அச் சட்டவாக்கத் தேதிக்கு முந்தைய எக்காலத்தையுமொட்டிய எச் சட்டவாக்கத்தின் கீழ் கொடுக்கப்பட வேண்டிய எவ்வரியினதும், அறவிடல் சேர்த்தல் தேவைகளுக்கு மட்டும் அதிகாரத்தில் இருந்ததெனவும், இருக்கிறதெனவும், தொடர்ந்து இருக்குமெனவும் கருதப்பட்டும், இதற்கிணங்க இச்சட்டம் தொடங்கிய தேதிக்கு முன்னரோ பின்னரோ, மேலே கூறப்பட்ட தேவைகளுக்காக இச் சட்டவாக்கமெதன் கீழ் செய்யப்பட்ட காரியம் அல்லது எடுத்துக் கொண்ட நடவடிக்கையெதுவும், அச்சட்டவாக்கம் தள்ளுபடி செய்யப்படாதது போல்—

(அ) அச்சட்டத்தின் கீழ், விடயத்திற்குப் பொருந்தக்கூடியபடி, முறையாகச் செய்யப்பட்டது அல்லது எடுக்கப்பட்டதெனக் கருதப்படலாம்.

(ஆ) அச்சட்டவாக்கத்துடன் செய்யப்படலாம் அல்லது அதன் கீழ் தொடரப்படலாம்.

**இலங்கை மத்திய வங்கி,**
அ. பெ. எண். 590,
கொழும்பு 1.
1966, ஏப்பிறல் 6.

**சுற்றறிக்கை எண். 23.**

**மீளநிதியீட்டம்-இடைத்தவணை, நெடுந்தவணைக் கொடுகடன் மீதான வட்டி வீதங்கள்**

சுட்டுக்குறிப்பு: நாணயவிதி அதிகாரச் சட்டத்தின் பிரவு 88 அ (1) (இ) (1963 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 67-வது பிரிவினுல் ஏற்படுத்தப்பட்டுள்ளபடி.)

கொடுகடன் நிலேயங்களுக்கு மத்திய வங்கியால் வழங்கப்படும் மீளநிதியீட்டக் கடன் களின் மீதான வட்டி வீதம்.

(அ) விவசாய அல்லது கைத்தொழில் அபிவிருத்திக்கு அல்லது வளர்ச்சிக்கு, ஆண் டொன்றிற்கு 3 சதவீதமாகும். ஆயின், இவ்வசதியினைப் பயன்படுத்தும் கொடுகடன் நிலே யங்கள், தங்கள் வாடிக்கைக்காரர்களுக்கு வழங்கப்படுவனவையும் இதன் நிமித்தம் மத்திய வங்கியிடமிருந்து மீளநிதியீட்டம் கோரப்படுபவையுமான கடன்களின் மீது ஆண் டொன்றிற்கு 6 சதவீதத்திற்கதிகமாக வட்டி அறவிடாதிருத்தல் வேண்டும். தேயிலே எந் திரங்களைக் கொள்வனவு செய்வதற்கும், புதிய தேயிலேத் தொழிற்சாலேகளே அமைப் பதற்கும் இந்நிலேயங்களினுல் வழங்கப்படும் கடன்களைப் பொறுத்த வரையில், இக்கடன் களின் மீது செலுத்தப்படும் வட்டியின் ஒரு பகுதியினைத் தேயிலேக் கட்டுப்பாட்டாளர் பொறுக்குமிடத்து, மீள நிதியிடும் கடன்களின் மீதான வட்டி வீதம் ஆண்டொன்றிற்கு 5 சதவீதமாகும். ஆயின் இவ்வசதியினைப் பயன்படுத்தும் கொடுகடன் நிலேயங்கள், தங் கள் வாடிக்கைக்காரர்களுக்கு வழங்கப்படுவனவையும், இதன் நிமித்தம் மத்திய வங்கியிட மிருந்து மீளநிதியீட்டம் கோரப்படுபவையுமான கடன்களின் மீது ஆண்டொன்றிற்கு 8 சதவீதத்திற்கதிகமாக வட்டி அறவிடாதிருத்தல் வேண்டும்.

(ஆ) வியாபார, வர்த்தக அல்லது வணிக அபிவிருத்திக்கு அல்லது வளர்ச்சிக்கு ஆண்டொன்றிற்கு 5 சதவீதமாயிருக்கும்.

1964, ஒகத்து 24 ஆம் தேதிச் சுற்றறிக்கை இல. 19 இத்தால் நீக்கப்படுகின்றது.

**எஸ். டி. அமரசிங்க,**
முதன்மைக் கணக்காளர்,
இலங்கை மத்திய வங்கி.

**டி. டபிள்யூ. இராஜபத்திரான,**
ஆளுநர்,
இலங்கை மத்திய வங்கி.

## இலங்கை மத்திய வங்கி

**சுற்றறிக்கை எண். 1.**
1966 யூன் 1இல் திருத்தியது.

### மத்திய வங்கியின் நாணய மாற்று வீதங்கள்

(சுட்டுக் குறிப்பு; நாணய விதி அதிகாரச் சட்டத்தின் 74ஆம் பிரிவு)

**1.** இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளுடன் மத்திய வங்கி நடாத்தும் கொடுக்கல் வாங்கல்களுக்குப் பின்வரும் நாணய மாற்று வீதங்கள் அமைவன:-

| | தந்தி மாற்றுதல்களுக்குரிய மத்திய வங்கியின் கொள்வனவு வீதங்கள் | | தந்தி மாற்றுதல்களுக்குரிய மத்திய வங்கியின் விற்பனவு வீதங்கள் | |
|---|---|---|---|---|
| | சி. | பெ | சி. | பெ. |
| ஸ்டேர்லிங் (இலங்கை ரூபாய்க்கு) உடன் மாற்று | 1/6 | 3/64 | 1/6 | 1/32 |
| பின்மாற்று (ஆறுமாதங்கள் வரைக்கும்) | உடன் மாற்றுக்கெதிரான கழிவு மாதமொன்றிற்கு 1/128 பெ. | | உடன் மாற்றுக்கெதிரான கட்டணம் மாதமொன்றிற்கு 1/128 பெ. | |
| தொடர்பான ஒப்படைப்பையுடைய பின்மாற்று டொலர்களின் கொள்வனவிற்கெதிரான பின்மாற்று (ஆறுமாதங்கள் வரைக்கும்) | ---- | | 1/6 | 1/32* |
| இந்திய ரூபாய் (100 இந்திய ரூபாய்களுக்கு) உடன் மாற்று | ரூ. 63 | 5 1/16 | ரூ. 63 | 3/8 |
| பின்மாற்று (ஆறுமாதங்கள் வரைக்கும்) | உடன் மாற்றுக்கு எதிரான கழிவு மாதத்திற்கு ஒரு ரூபாவில் 1/32 * | | உடன் மாற்றுக்கெதிரான கட்டணம் மாதத்திற்கு ஒரு ரூபாவில் 1/32* | |

* ஒப்பந்தங்கள் வர்த்தக வங்கியின் விருப்பத்தின் பேரில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். ஆனால், ஒப்பந்த காலம் முடிவடைய முன்னர் எடுக்கப்படின், ஒப்பந்தஞ் செய்யப்பட்ட நாணய மாற்று வீதத்தில் இவை எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**2.** வர்த்தக வங்கிகளுடன் செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்களுக்கென அமையும், ஐக்கிய அமெரிக்கடொலருக்குரிய மத்திய வங்கியின் வீதங்கள் சட்டப்படியான சமநிலை வீதத்தின் ஒரு சதவீதத்தின் அரைவாசிக்குள் மாறக்கூடியனவாக இருக்கும். இவ்வித மாறுதல்கள் ஏற்படுமிடத்து அவை அறிவிக்கப்படும்.

**3.** எந்நேரத்திலும் இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் நீக்கப்படலாம், கூட்டப்படலாம், அல்லது திருத்தப்படலாம்.

**எஸ். டி. அமரசிங்க**
முதன்மைக் கணக்காளர்.

**டி. டபிள்யூ. இராஜபத்திரான**
ஆளுநர்.

## இலங்கை மத்திய வங்கி

**சுற்றறிக்கை எண். 2**
1966, யூன் 8-ல் திருத்தப்பட்டது

### வர்த்தக வங்கிகளின் நாணய மாற்று வீதங்கள்

(சுட்டுக் குறிப்பு; நாணய விதி அதிகாரச் சட்டத்தின் 76 ஆம் பிரிவு.)

வர்த்தக வங்கிகளின் கொடுக்கல் வாங்கல்களுக்குப் பின்வரும் நாணய மாற்று வீதங்கள் அமைவன.

| | ஆகக்குறைந்த கொள்வனவு வீதங்கள் நேரான தந்தி மாற்றல்கள் | ஆகக்கூடிய விற்பனவு வீதங்கள் நேரான தந்தி மாற்றல்கள். |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| ஸ்டேர்லிங்- (1 பவுணுக்கு) (அ) 100 பவுணுக்கு அல்லது அதற்குக் கீழ்ப்பட்ட தொகைகளுக்கு. | 13 26 (தொடர்பாக ரூபாவுக்கு 1/6 $\frac{3}{32}$) | 13 36 (தொடர்பாக ரூபாவுக்கு 1/5 $\frac{31}{32}$) |
| (ஆ) 100 பவுணுக்கு மேற்பட்ட தொகைகளுக்கு | 13 28 (தொடர்பாக ரூபாவுக்கு 1/6 $\frac{1}{16}$) | 13 33 (தொடர்பாக ரூபாவுக்கு 1/6) |
| ஐக்கிய அமெரிக்க டொலர்கள் | மத்திய வங்கியின் வாங்கும் வீதத்திற்குக் கீழே 100 டொலருக்கு .75 சதத்திற்கு மேற்படாமல் | மத்திய வங்கி விற்கும் வீதத்திற்கு மேலே 100 டொலருக்கு 1/50க்கு மேற்படாமல் |
| இந்திய ரூபாய்கள் (100 இந்திய ரூபாய்களுக்கு) | 63 $\frac{9}{32}$ | 63 $\frac{13}{32}$ |
| பாகிஸ்தானிய ரூபாய்கள் (100 பாகிஸ்தானிய ரூபாய்களுக்கு) | 99 $\frac{5}{8}$ | 100 $\frac{5}{32}$ |

**எஸ். டி. அமரசிங்க**
முதன்மைக் கணக்காளர்.

**டி. டபிள்யூ. இராஜபத்திரான**
ஆளுநர்.